[1978 ஏப்ரல் 6

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவரவர்களே, இந்தச் சட்டத்திற்கு பெயரை கான்ட்ராக்ட் ரெகுலேஷன் அன்ட் அபாலிஷன் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். முதலில் ரெகுலேட் பண்ணிய பிறகு அபாலிஷன் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால் அந்தச் சட்டம் வந்த பிறகு பல தொழிற்சாலைகளில் குறிப்பாக உற்பத்தித் துறையில் மேனுபேக்சரிங் ப்ராசஸ் பிரிவிலும் அறிமுகப்படுத்தி இருக்கிறார்களே அது அரசுக்குத் தெரியுமா? குறிப்பாக நெல்லிக்குப்பம் தொழிற்சாலையில் மேனுபாக்சரிங் ப்ராசஸிலும் கான்ட்ராக்ட் முறை இருக்கின்றது. அதனை மாற்றுவதற்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரிகள் ஆங்காங்கே சென்று பரிசோதனை செய்து ஆவன செய்கிறார்கள். நெல்லிக்குப்பம் தொழிற்சாலையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் தகவல் சொல்லவில்லை. அவர் அதுபற்றி புகார் சொல்லவில்லை. மாறாக உறுப்பினர் ரமணி அவர்கள் சங்கரி சிமெண்ட் ஆலையில் இப்படி நடைபெற்று வருவது பற்றிச் சொன்னார்கள். அதற்காக டெபுடி சீஃப் ஃபேக்டரி இன்ஸ்பெக்டர் என்ற அதிகாரியை அங்கு அனுப்பி அவர் அடிக்கடி சர்ப்ரைஸ் செக் செய்து இதுபற்றிய தகவல்களைச் சேகரித்து அதன்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களும் அறிவார்கள், மாண்புமிகு கோவிந்தராசன் அவர்களும் அறிவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேந்தங்குடி பேருந்து விபத்தில் இறந்தவர் குடும்பங்களுக்கு உதவித் தொகை.

*[827 வினா— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 9-7-1977ஆம் நாள் மாயூரம் சேந்தங்குடியில் நடைபெற்ற பேருந்து விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு அரசு ஏதேனும் உதவித்தொகை வழங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை குடும்பங்களுக்கு?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ) 9-7-1977 அன்று சேந்தங்குடியில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் இறந்தவர்கள் நான்கு பேர். அவர்களது குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 1,000/, உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது.

1978 ஏப்ரல் 6]

திரு. என்· கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த விபத்தினால் இறந்தவர்கள் நான்கு பேர்கள் என்றும் அவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனாலும் அந்த விபத்தில் காயம் அடைந்து கைகளையும், கால்களையும் இழந்த பலபேர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; அந்த வண்டியை ஓட்டிச் சென்ற ஓட்டுநர் இன்னும் மருத்துவ மனையில் இருந்து சிகிச்சை முடிவு பெறாமல் வீட்டுக்கு வர முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை போலவே சீர்காழியைச் சேர்ந்த ஒரு மூதாட்டி யாருக்கு தலையிலே இந்த விபத்து காரணமாக அடிப்பட்டதால் மூளைக் கோளாறு ஏற்படக்கூடிய அளவிற்கு இன்று அவருடைய குடும்பத்தையே கவனிக்க முடியாத நிலைமைக்கு ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கும் அரசு உதவித்தொகை ஏதேனும் அளிப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அந்த விபத்திலே பாதிக்கப்பட்ட அத்தனை பேர்களுக்கும் சோழன் போக்குவரத்துக் கழகம் இழப்பீட்டுத் தொகை அளித்திருக்கிறது. காயமடைந்தோருக்கும் உதவித்தொகை அளித்திருக்கிறது. சீர்காழியைச் சேர்ந்த திருமதி காளியம்மாள் என்பவருக்கு ரூபாய் 500-ம், திருமதி தேவகி என்பவருக்கு ரூபாய் 300-ம் திரு கலிய மூர்த்தி என்பவருக்கும் ரூ. 300-ம், திரு. கிருஷ்ண நாடார் என்பவருக்கு ரூ. 700-ம், திரு. கே. ஆறுமுகம் என்பவருக்கு ரூ. 700-ம், திரு. மருதநாயகம் என்பவருக்கு ரூ. 2,000-ம், திரு. மாரிமுத்து என்பவருக்கு ரூ. 1,250-ம், திருமதி பட்டு ஆச்சி என்பவருக்கு ரூ. 1000,ம் இப்படி காயம் அடைந்த அனைவருக்கும் இழப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: இந்த பேருந்து விபத்தில் இறந்தவர்களுக்கு ஆயிரம் ரூபாய் முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அளிப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது, அறிவிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் இறந்தவர்களுக்கு என்று மட்டும் கொடுக்கப்படுமா? அல்லது முன்னால் நடந்து வழக்குமன்றத்தில் வழக்கு நடந்து நஷ்ட யீடு கிடைக்காமல் போயிருக்கிறதே, அப்படிப்பட்டவர்களுக்கும் இந்த உதவி கிடைக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய இழப்பீடு நீதிமன்றத்தின் மூலம் அவர்களுக்குக் கொடுக்கப் படுவதற்கு முன்னர், அதற்கும் இதற்கும் தொடர்பில்லாத வகையில் முதல் அமைச்சர் அவர்கள் நிதியலிருந்து தனியாக ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது.

திரு, என். கிட்டப்பா: குறிப்பாக இந்த விபத்து நடைப்பெற்ற தற்குக் காரணம், சீர்காழி-மாயூரம் வருகிற நம்பர் 2, டவுன் பஸ் விபத்துக்கு உள்ளாகக் காரணம் அந்தப் பேருந்துக்குப் போடப்

பட்டுருந்த முன்பக்க இரண்டு சக்கரங்களுக்கும் ரீட்ரெட் செய்யப்பட்ட டயர்கள் பொருத்தப்பட்டிருந்ததாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. எனவே அத்தகைய முறையை மாற்றி ரீட்ரெட் செய்யப்பட்ட டயர்களை இனிமேல் அத்தகைய பேருந்துகளுக்குப் பொருத்தாமல் இருக்க, இத்தகைய விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு, அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ரீட்ரெட் செய்யப்பட்ட டயர்கள் முன் சக்கரத்தில் முதன்முறையாக முன்பக்கத்தில் போடுவது வழக்கமாக இருந்துவருகிறது. ஆனால் இந்த விபத்துக்குப் பிறகு அதுபற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

அண்ணாசாலை தபால் நிலையம் எதிரில் உள்ள சுரங்கப்பாதை

*828 வினா-திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணாசாலையில் தபால் நிலையத்திற்கு எதிரில் போடப்பட்ட சுரங்கப்பாதை வேலைக்கு போடப்பட்ட மதிப்பீடு: செய்யப்பட்ட செலவு முறையே எவ்வளவு?

(ஆ) இப்பாதை திறப்பு விழாப்பணி யார் தலைமையில் செய்யப்பட்டது?

(இ) இதில் அறிவிக்கப்பட்டவாறு செய்யப்படவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மேற்படி வேலையின் மதிப்பீட்டுத்தொகை ரூ. 12.60 இலட்சம். இவ்வேலைக்கு 31-1-78 வரை ரூ. 12.27 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேற்படி பணிக்கான திறப்பு விழா ஏதும் நடைபெறவில்லை.

(இ) விழா ஏதும் நடைபெறாததால் இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: இந்தச் சுரங்கப்பாதை திறப்பு விழாவை செய்ய மாண்புமிகு அமைச்சர் திரு. பா. ராமச்சந்திரன் அவர்களை அழைத்திருந்தார்கள். அது விடுபட்டுப் போய்விட்டதா? அப்படியானால் என்ன காரணத்தால் அது விடுபட்டது? அவர்கள் சம்மதிக்கவில்லையா? இல்லாவிட்டால் அப்போதுள்ளவர்கள் அவர்களை அனுப்ப சம்மதிக்கவில்லையா? அதைப்பற்றிச் சொல்ல முடியுமா?